# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.193/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>கீழ்கொடுங்காலூர் காவல் நிலையம் |
| Father's Name | : | த.பெ.வரதன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 53 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of **16.03.2026.**

**1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் இறந்துவிட்டார்கள்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பாபு உதவி ஆய்வாளர் பணி ஓய்வு பெற்று விட்டார். அதனால் அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்ய இயலவில்லை. அவர்களது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 04.02.2015ம் தேதி வந்தவாசி அரசு மருத்துவமனையில் இருந்து அ.சா.1னிடம் புகார் பெற்று சி.எஸ்ஆர்.எண்.32/2015 வழங்கி பின்பு 07.02.2015ம் தேதி நிலை குற்ற எண்.24/2015 இதச பிரிவு 294(b), 323, 324, 506(2) ஆகிய பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் அ.த.சா.ஆ.3 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும்.

2) சம்பவ சாட்சிகளாக பழனி, பெருமாள், குமரேசன், தர்மன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) குமார், ராமலிங்கம் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும்.

4) காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நாகஅர்ஜுன் அவர்களை விசாரணை செய்து விபத்து பதிவேடுகள் பெறப்பட்டுள்ளது. பழனி என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அது அ.த.சா.ஆ.7 ஆகும். பெருமாள் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அது அ.த.சா.ஆ.8 ஆகும். அவற்றில் காயம்பட்ட நபருர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்று கருத்துரு வழங்கியுள்ளார்.

5) வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள்மீது இதச பிரிவு 294(b), 323, 324, 506(2) ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6) புலன்விசாரணையின்போது எதிரிகள் முன்ஜாமின் பெற்றிருந்தார்கள்.

அரசு தரப்பு சான்றாவணம் 7-ஐ குறியீடு செய்ய அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 294ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பில் ஆட்சேபனை இன்றி குறியீடு செய்யப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரிளுக்கு எதிராக நிலையத்தில் வைத்து கோப்புகள் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.
Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.